முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2016 சனவரி

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2016-01-31
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 09
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வ/வு சுப்பரெக் (தனி) கம்பனி** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியாகும். இலங்கைப் பிரசையான திரு. **ஜயசூரிய வ/வு சுப்பரெக் (தனி)** கம்பனியின் உள்நாட்டுத் தலைமை அதிகாரியாவார். அவர் ஒரு வருட காலப் பகுதியில் பலமுறை வெளிநாடு சென்றிருந்தார். அவ்விபரங்கள் பின்வருமாறு

| **இலங்கையிலிருந்து வெளிச்செல்லல்** | **இலங்கைக்கு வருதல்** |
|---|---|
| 2014.03.23 | 2014.05.08 |
| 2014.07.27 | 2014.09.16 |
| 2014.11.10 | 2015.01.07 |
| 2015.03.02 | 2015.04.28 |

**நீங்கள் செய்ய வேண்டியது,**
இலங்கையில் வரிவிதிப்புத் தேவைக்காக வரிமதிப்பாண்டு 2014/15 தொடர்பில்

(a) **வ/வு சுப்பரெக் (தனி) கம்பனி** மற்றும், (03 புள்ளிகள்)

(b) **ஜயசூரியாவின்** (02 புள்ளிகள்)

வதிவிட அந்தஸ்தை (Resident status) **அடையாளம் காணுதல்.** (மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**திரு. சொய்சா** 2014 யூன் மாதத்தில் தனது மனைவியிடமிருந்து விவாகரத்துச் செய்துகொண்டார். அத்திகதியிலிருந்து அவரது மகளான 15 வயது நிரம்பிய **நெத்மி** தனது தாயார் **திருமதி. சொய்சா**வுடன் வாழ்வதுடன் அவளது அனைத்துச் செலவுகளையும் **திருமதி. சொய்சா** பொறுப்பேற்றுக் கொண்டார்.

நீங்கள் **திரு. சொய்சாவின்** வரி ஆலோசகராவீர்.

நீங்கள் செய்ய வேண்டியது,

பின்வருவனவற்றை அவருக்கு **விளக்குதல்** :

(a) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் தேவைகளுக்காக ஒரு ‘‘பிள்ளை’’ என்பவர் யார்? (03 புள்ளிகள்)

(b) **நெத்மியின்** வருமானம் எவரது வருமானத்துடன் சேர்க்கப்படும்? (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வ/வு AB கம்பனியின்** நீண்டநாள் பணியாளரான **பெரேராவுக்கு** 2015 சனவரியில் இருதய சத்திர சிகிச்சை ஒன்றிற்கு உட்படவேண்டி ஏற்பட்டது. இத்தேவைக்காக கம்பனியால் ஒரு விசேட கொடுப்பனவாக அவருக்கு ரூ.100,000/- வழங்கப்பட்டது. இக்கொடுப்பனவு கம்பனியால் உபகாரக் கொடுப்பனவு (Bonus) எனக் குறிப்பிடப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது,**

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக **பெரேராவின்** வருமான வரிக்காக இக்கொடுப்பனவின் வரிவிதிப்புத் தகைமையை (chargeability) **விளக்குக.** (உங்கள் விளக்கத்தை உறுதிப்படுத்துமுகமாக இலங்கையின் ஏதாவது சட்ட வழக்கைக் (case law) **குறிப்பிடவும்)**

(05 புள்ளிகள்)

## வினா 04

**தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச்** (NBT) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விதிக்கத்தக்க செயற்பாடுகளைக் **குறிப்பிடவும்.**

(05 புள்ளிகள்)

*பகுதி A முடிவடைந்தது*

# பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

சட்டத்தரணி **சுதத்** 2012 ஆம் ஆண்டில் தனது தொழிலை ஆரம்பித்தார். **சுதத்தின்** நண்பரான **ஜகத்** என்பவர் **சுதத்தின்** நிறுவனத்தில் பங்காளராக இணைந்து 2013 இல் பங்குடமையொன்று ஆரம்பிக்கப்பட்டது. புதிய வியாபாரத்தின் பெயர் **எஸ்ஜே அசோசியேற்ஸ்** ஆகும். **சுதத்தும் ஜகத்தும்** இலாபத்தை முறையே 2 : 1 என்ற விகிதாசாரத்தில் பகிர்ந்துகொள்ள உடன்பட்டனர். **சுதத்** மாதாந்தச் சம்பளமாக ரூ.50,000/- பெற்றுக் கொள்ள உரித்துடையவராவார்.

வரிமதிப்பாண்டு 2014/15 க்கான பங்குடமையின் நிதித் தகவல்கள் பின்வருமாறு :

| | US $ | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| தொழில்சார் கட்டணம் : | | | |
| உள்நாட்டு நாணயம் | | | 10,000,000 |
| வெளிநாட்டு நாணயம் | 25,100 | | 3,539,100 |
| கழி : | | | 13,539,100 |
| சம்பளம் | | 4,200,000 | |
| தொலைபேசி | | 125,000 | |
| எழுதுகருவிகள் | | 45,000 | |
| தேய்மானம் | | 36,800 | |
| மின்சாரம் | | 55,000 | |
| வட்டி | | 258,000 | |
| நீர் | | 36,000 | |
| வெளிநாட்டு நாணய வருமானத்தை உழைப்பதற்கான செலவுகள் | | 525,000 | (5,280,800) |
| | | | 8,258,300 |
| இலாபப் பங்கு : **சுதத்** | | 5,505,533 | |
| **ஜகத்** | | 2,752,767 | (8,258,300) |
| | | | - |

**குறிப்புகள்** :

(1) வரி நோக்கங்களுக்கான தேய்மான விடுதொகை (Depreciation allowance) ரூ. 60,000/-.

(2) **சுதத்திற்கு** செலுத்திய அவரது சம்பளம் ரூ.600,000/- சம்பளங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(3) **எஸ்ஜே அசோசியேற்ஸ்** நிறுவனத்திற்கு **ஜகத்** அவர்களால் வழங்கப்பட்ட கடனுக்காக அவருக்கு வட்டி செலுத்தப்பட்டது.

(4) வெளிநாட்டில் வழங்கிய சேவைகளுக்காக தொழில்சார் கட்டணம் அந்நிய நாணயத்தில் பெறப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியது ,**

(a) பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் (Divisible profit) **கணிப்பிடுதல்** (03 புள்ளிகள்)

(b) இலாபப் பகிர்வுக் கூற்றினைத் (Statement of Profit distribution) **தயாரித்தல்** (03 புள்ளிகள்)

(c) பங்குடமையினால் செலுத்தப்பட வேண்டிய வரியினைக் **கணிப்பிடுதல்** (04 புள்ளிகள்)

*(ஏதேனும் பெறுவனவுகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக கருதப்பட்டிருப்பின் அதற்கான காரணங்களைக் குறிப்பிடவும்)* (மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனமான **ஷாப் அசோசியேற்** தொழில்சார் கணக்கியற் சேவைகளை வழங்கும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. **ஷாப் அசோசியேற்ஸ்** நிறுவனத்தின் புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 2015 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தகவல்கள் பின்வருமாறு :

(1)

| **வழங்கப்பட்ட விலைப்பட்டியல்** | **வழங்கல்களின் பெறுமதி** |
|---|---|
| உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக | ரூ.4,250,000 |
| வதிவற்ற (வெளிநாட்டு) வாடிக்கையாளர்களுக்கு அமெரிக்க டொலர்களில் செலுத்துவதற்காக(அமெரிக்க டொலர் 1 = ரூ.141) | USD 6,500 |

(2) நிழற்படப் பிரதிபண்ணும் இயந்திரமொன்றை பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்யப்படாத ஒருவருக்கு விற்பனை செய்ததன் மூலம் ரூ. 166,500/- பெறப்பட்டது.

(3)

| **உள்ளீட்டு பெ.சே.வரி (VAT)** | **ரூ.** |
|---|---|
| அலுவலகச் செலவுகள் மீது | 130,000 |
| பிரயாணத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்றின் திருத்தத்திற்காக | 11,000 |

(4) முந்திய காலாண்டிலிருந்து உள்ளீர்க்கப்படாது (Unabsorbed) முன்கொண்டு வரப்பட்ட பெ.சே.வரி ரூ.36,000/-.

(5) தவணைக் கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்ட பெ.சே.வரி ரூ.120,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது ,**

(a) 2015 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தப்பட வேண்டிய மீதி பெறுமதி சேர் வரியை **மதிப்பிடுதல்** (07 புள்ளிகள்)

(b) 2015 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பெறுமதி சேர் வரியைச் செலுத்துவதற்கான உரிய திகதிகளைக் **குறிப்பிடுதல்** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரை. மதுறட்ட (தனி) வதிவுள்ள கம்பனி** இறப்பர் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. அக்கம்பனி 2013/14 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமான வரித் திரட்டினை உரிய திகதியில் சமர்ப்பித்திருந்தது. உதவி ஆணையாளர் அத்திரட்டினை நிராகரித்து வரி மதிப்பீடு ஒன்றினை அனுப்பியிருந்தார். அக்கம்பனி வரி மதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்ய விரும்புகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது ,**

(a) செல்லுபடியான வருமான வரி மேன்முறையீடொன்றிற்கான தேவைப்பாடுகளைக் **குறிப்பிடுதல்** (04 புள்ளிகள்)

(b) தாமதமான மேன்முறையீடொன்றினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுதல்** (03 புள்ளிகள்)

(c) செல்லுபடியான மேன்முறையீடொன்று கிடைக்கப்பெறும் பொழுது ஆணையாளர் நாயகத்தினால் அத்தகைய மேன்முறையீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த படிமுறையைக் **குறிப்பிடுதல்** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவுற்றது*

# <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரை. ரஜரட்ட இம்போட்ஸ் (தனி) கம்பனி** 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதுடன் அது விவசாய உபகரணங்களை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யும் விபாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன :

(1) 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்பான நிகர இலாபம் ரூ. 12,847,325/-.

(2)

| **ஏனைய வருமானம்** | **ரூ.** |
|---|---|
| பங்கிலாப வருமானம் - நிறுத்தி வைத்தல் வரி கழித்த பின் நிகர | 90,000 |
| திறைசேரி உண்டியல்களிலிருந்து பெறப்பட்ட வட்டி | 243,000 |
| **மொத்தம்** | **333,000** |

(3)

| **வரிக்கு முன்பான இலாபத்தைப் பெறும்பொழுது கழிக்கப்பட்ட செலவுகள்** | **குறிப்பு** | **ரூ.** |
|---|---|---|
| நிர்வாகம் | 1 | 8,407,200 |
| விற்பனை விநியோகம் | 2 | 1,050,000 |
| நிதி மற்றும் ஏனையவை | 3 | 95,275 |
| **மொத்தம்** | | **9,552,475** |

(4) **குறிப்பு 01** – நிர்வாகச் செலவுகள் :

| | **குறிப்பு** | **ரூ.** |
|---|---|---|
| சம்பளமும் கூலிகளும் | | 4,228,000 |
| ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதி | | 634,200 |
| பணிக்கொடை ஏற்பாடு | | 136,000 |
| தேய்மானம் | | 294,000 |
| விருந்துபசாரம் | | 38,000 |
| உள்நாட்டுப் பிரயாணம் | | 68,000 |
| வெளிநாட்டுப் பிரயாணம் | 1.1 | 184,000 |
| கம்பனி உருவாக்கச் செலவுகள் | 1.2 | 285,000 |
| நன்கொடை | 1.3 | 100,000 |
| சட்டச் செலவுகள் | 1.4 | 128,000 |
| வாடகை | | 420,000 |
| பயனளிப்புகள் (Utilities) | | 136,000 |
| ஏனைய செலவுகள் | | 1,756,000 |
| **மொத்தம்** | | **8,407,200** |

**குறிப்பு 1.1 – வெளிநாட்டுப் பிரயாணம்**

வழங்குநர்களைச் சந்திப்பதற்காக முகாமைப் பணிப்பாளர் சீனாவுக்குச் சென்றதோடு, அப்பிரயாணத்தின்போது ஏற்பட்ட செலவுகள் வெளிநாட்டுப் பிரயாணங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டன.

**குறிப்பு 1.2 – கம்பனி உருவாக்கச் செலவுகள்**

கம்பனி உருவாக்கச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

| | **ரூ.** |
|---|---|
| கம்பனி உருவாக்குதல் தொடர்பாக ஏற்பட்ட சட்டக் கட்டணங்கள் | 235,000 |
| பங்கு வழங்குதற் செலவுகள் | 50,000 |
| **மொத்தம்** | **285,000** |

**குறிப்பு 1.3 – நன்கொடை**

வருட காலப் பகுதியில் "எமக்காக நாம் (அப்பி வெனுவன் அப்பி)" நிதியத்திற்கு கம்பனி நன்கொடையாக வழங்கியது - ரூ. 100,000/-.

**குறிப்பு 1.4 – சட்டச் செலவுகள்**

வருட காலப் பகுதியில் சுங்கக் கட்டணங்களில் மாற்றம் செய்தமைக்காக சுங்கத் திணைக் களத்தால் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. கம்பனி சார்பாக வாதிடுவதற்காக சட்டத்தரணி ஒருவருக்கு ரூ. 128,000/- செலுத்தப்பட்டது.

(5) **குறிப்பு 2 – விற்பனை மற்றும் விநியோகம்**

| | | **ரூ.** |
|---|---|---|
| விளம்பரம் | குறிப்பு 2.1 | 475,000 |
| விற்பனைத் தரகு | | 575,000 |
| **மொத்தம்** | | **1,050,000** |

**குறிப்பு 2.1 - விளம்பரச் செலவுகள்**

விளம்பரத்திற்காக கம்பனிக்கு பின்வரும் செலவுகள் ஏற்பட்டன.

| | **ரூ.** |
|---|---|
| தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கான பத்திரிகை விளம்பரம் | 25,000 |
| இலத்திரனியல் ஊடக விளம்பரம் | 450,000 |
| **மொத்தம்** | **475,000** |

(6) **குறிப்பு 3 – நிதி மற்றும் ஏனைய செலவுகள்**

| | | **ரூ.** |
|---|---|---|
| குத்தகை வட்டி | குறிப்பு 3.1 | 14,325 |
| கடன் வட்டி | குறிப்பு 3.2 | 68,200 |
| வங்கிக் கட்டணங்கள் | | 12,750 |
| **மொத்தம்** | | **95,275** |

**குறிப்பு 3.1 – குத்தகை வட்டி (Lease Interest)**

2014 யூலை 01 ஆந் திகதி நிதிக் குத்தகை ஒப்பந்தமொன்றின் கீழ் இரண்டு மடிக் கணினிகள் 24 மாத காலத்திற்குப் பெறப்பட்டன. குத்தகையின் மாதாந்தத் தவணைக் கட்டணம் ரூ. 7,600/-. வருட காலப் பகுதியில் கம்பனி 9 தவணைக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தது.

**குறிப்பு 3.2 – கடன் வட்டி (Loan Interest)**

கம்பனி பண்டகசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்தது. இதற்காக வர்த்தக வங்கியொன்றிலிருந்து கடனொன்று பெறப்பட்டது. கடனுக்காகச் செலுத்தப் பட்ட வட்டி வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டது.

(7) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பின்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டன.

- 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் பின்வருமாறு :

| **சொத்து வகை** | **கிரயம் ரூ.** |
|---|---:|
| காணி | 1,000,000 |
| அலுவலக உபகரணம் | 78,000 |
| லொறி | 2,500,000 |
| தளபாடம் | 26,000 |
| கணினி உபகரணங்கள் | 280,000 |
| கணினி மென்பொருள் - இலங்கையில் விருத்தி செய்யப்பட்டது | 65,000 |
| மடிக் கணினிகள் - குத்தகைச் சொத்துக்கள் | 160,000 |
| **மொத்தம்** | **4,109,000** |

- குத்தகைக்குப் பெறப்பட்ட சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் சொத்துக்களும் கம்பனி கூட்டிணைக்கப்பட்ட பொழுது கொள்வனவு செய்யப்பட்டன.

(8) கம்பனி சுய மதிப்பீட்டு அடிப்படையில் ரூ. 1,500,000/- வருமான வரி செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது ,**

2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுதல்**

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்

(b) வரி மதிப்பிடு வருமானம்

(c) வரிவிதி வருமானம்

(d) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(e) செலுத்த வேண்டிய மீதி வரி

**குறிப்பு :** கிரயங்கள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

வதிவுள்ள தனியாளான **ரத்நாயக்க**, நுண்நிதிக் கம்பனியொன்றின் சந்தைப்படுத்தும் முகாமையாளராகப் பணியாற்றுகிறார். 2014/15 ஆம் வரிமதிப்பாண்டுக்கான (இதன் பின்பு 'வருடம்' எனக் குறிப்பிடப்படும்) **ரத்நாயக்க** தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) மாதாந்தச் சம்பளமாக ரூ. 80,000/- பெற்றுக் கொண்டார். 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபத்திலிருந்து 2014 டிசெம்பரில் ஒரு மாத சம்பளம் உபகாரக் கொடுப்பனவாக (bonus) அவருக்கு வழங்கப்பட்டது.

(2) மேலும் விருந்துபசார படியாக (Entertainment allowance) மாதாந்தம் ரூ. 15,000/- பெற்றுக் கொண்டார்.

(3) கம்பனி அவருக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றை எரிபொருளுடன் வழங்கியதோடு பாவனை தொடர்பான பதிவுகள் எதுவும் பேணப்படவில்லை.

(4) உ.பொ.செ. (PAYE) வரியாக வருடத்திற்காக ரூ. 29,596/- கழிக்கப்பட்டது.

(5) அவர் தனது பெற்றோரிடமிருந்து முதுசமாக (Inherited) பெற்றுக் கொண்ட வீட்டில் வசிக்கிறார். இவ்வீட்டின் நிகர ஆண்டுப் பெறுமதி ரூ. 120,000/-.

(6) **ரத்நாயக்க** பிலியந்தலையில் இருந்த தனது மற்றொரு வீட்டினை 2014 ஏப்ரல் மாதம் தொடக்கம் ரூ.50,000/- மாதாந்த வாடகைக்கு கொடுத்திருந்தார். இவ்வீட்டின் சோலை வரி மதிப்பீடு ரூ. 135,000/- ஆவதுடன் சோலை வரி 20% இல் செலுத்தப்படும்.

(7) வருட காலப் பகுதியில் காணியொன்றை ரூ. 1,250,000/- க்கு விற்பனை செய்திருந்தார். இக்காணி அவரது பாட்டியினால் 2000 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் அதன் சந்தைப் பெறுமதி ரூ. 500,000/- ஆகும்.

(8) இவ்வருட காலப் பகுதியில் நிலையான வைப்புக் கணக்கிலிருந்து ரூ. 82,800/- (நிறுத்தி வைத்தல் வரி 8% கழித்த பின்) நிகர வட்டி பெற்றுக் கொண்டார்.

(9) அவர் **வரை. மஜிக் ஹோல்டிங் கம்பனியிலிருந்து** பங்கிலாபம் பெற்றுக் கொண்டார். பங்கிலாப வார்நாமத்தின்படி விபரங்கள் பின்வருமாறு :

| | **மொத்தப் பங்கிலாபம் (ரூ.)** | **நிறுத்தி வைத்தல் வரி (ரூ.)** | **நிகர பங்கிலாபம் (ரூ.)** |
|---|---|---|---|
| வேறு கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்களிலிருந்து | 40,000 | 4,000 | 36,000 |
| இலாபங்கள் மற்றும் வருமானங்களிலிருந்து | 20,000 | 2,000 | 18,000 |
| **மொத்தம்** | **60,000** | **6,000** | **54,000** |

(10) **ரத்நாயக்க** பிலியந்தலவில் உள்ள வீட்டை நிர்மாணிப்பதற்காக தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து வீட்டுக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டார். இந்த ஆண்டில் இக்கடனுக்கான வட்டியாக ரூ. 64,000/- உம் கடன் மீள்கொடுப்பனவாக ரூ. 82,000/- உம் செலுத்தியிருந்தார்.

(11) இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு நிறுவனப்படுத்தப்பட்ட பராமரிப்பு வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட தரும நிறுவனமொன்றிற்கு ரூ. 25,000/- அன்பளிப்புச் செய்தார்.

(12) அவர் தனது ஆயுட் காப்புறுதிக் கட்டணமாக ரூ. 53,400/- செலுத்தினார். இது 10 வருடங்களுக்கு வருடாந்தக் கட்டணம் செலுத்த வேண்டிய ஒரு காப்புறுதி உடன்பாடாகும்.

மேற்படி தகவல்களிலிருந்து **நீங்கள் செய்ய வேண்டியது** ,

2014/15 ஆம் வரிமதிப்பாண்டு தொடர்பில் **ரத்நாயக்கவுக்கு** பின்வருவனவற்றை **மதிப்பிடுக.**

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி, மற்றும்

(c) செலுத்த வேண்டிய மீதி வரி.

*(செலவுகள் அனுமதிக்கப்பட்டமைக்கு அல்லது அனுமதிக்கப்படாமைக்கு காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவடைந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |